Prepared by-V.Puvendran
Kg/Dehi/Kandaloya T.M.V

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக...

**1-10** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(1) (2) (3) (4)** என எண்ணிடப்பட்ட விடைகளிள் சரியான அல்லது மிக பொருத்தமான விடையை தெரிவு செய்க

01)வணிகத்தினால் நிறைவு செய்யப்படும் மனித தேவை விருப்பங்களுக்கு உதாரணங்கள் முறையே?

1- இடியப்பம் - உணவு
2- பாடசாலை - ஆசிரியர்
3- உறையுள் - மாடி வீடு
4- கல்வி - காற்சட்டை

02) நவீன காலத்தில் மனித வாழ்க்கை வணிகத்திலேயே தங்கியுள்ளது .வணிகம் என்பதன் கருத்து?

1- பொருட்களை விநியோகிக்கும் செயற்பாடு.
2- மனித தேவை விருப்பங்களை பூர்த்தி செய்யும் செயற்பாடு.
3- உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடல்.
4- சேவை வழங்களில் ஈடுபடல்.

03) ஒரு வணிகத்தின் நுகர்வோனது பிரதான நோக்கமாக கருதப்படுவது?

1- தரமான பொருட்களை நியாயமான விலையில் பெறல்.
2- ஈடுபடுத்திய நிதிக்கு போதியளவு இலாபத்தை பெறல்.
3- வழங்கிய கடன்களை மீழப்பெற்றுக்கொள்ள
4- தொடர்ச்சியான கட்டளைகளை பெற்றுக்கொள்ள.

04) வணிகத்தின் துணை நோக்கமாக கருத கூடியது?

1- இலாபத்தை உழைத்தல்.
2-. பொருள் சேவைக்கான தரத்தினை மேம்படுத்தல்
3- நுகர்வோர் தேவை விருப்பங்களை பூர்த்தி செய்தல்.
4- புத்தாக்க நடவடிக்கையில் ஈடுபடல் .

05) தேவையின் பண்பை மட்டும் கொண்ட தொகுதி.

A- வரையறுக்கப்பட்டவை
B- பல்வகைப்பட்டவை
C-தோற்றுவிக்க கூடியது.
D-பொதுத்தன்மை கொண்டது.

1- AB
2- AD
3- CD
4- AC

06)பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணியாக கருத முடியாத காரணியவது.

1- முயற்சி
2- இலாபம்
3- மூலதனம்
4- நிலம்

07) தொடர்ச்சியாக பொருள் கட்டளைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்கு வணிக நடவடிக்கையில் அக்கறை செலுத்தும் பிரிவினர்.?

1- அரசு
2- வழங்குனர்
3- ஊழியர்
4- சமூகம்

08) சேவை உற்பத்தி வணிகம் அல்லாதது பின்வருவனவற்றுள் எதுவாக அமையும்.?

1- வங்கிகள்
2-கல்வி நிறுவனங்கள்
3-காப்புறுதி நிறுவனங்கள்
4-தளபாட உற்பத்தி நிறுவனங்கள்

09) வணிகச் சூழலில் அகச்சூழல் காரணியாக அமைவது.

1- வாடிக்கையாளர்
2- போட்டியாளர்
3- அரசியல் சூழல்
4- ஊழியர்

10) தமது அறிவு திறன் என்பவற்றை பயன்படுத்தி ஒப்படைக்கப்பட்ட கருமங்களை சரியான முறையில் நிறைவேற்றுபவர் ………….. எனப்படுவார்.

1- உரிமையாளர்
2- வழங்குனர்
3- போட்டியாளர்
4- ஊழியர்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக?

1. வணிகம் என்ற எண்ணக்கருவை வரையறுக்க?

2. வணிக நோக்கங்களை குறிப்பிட்டு அவற்றை பொது நோக்கம் துணை நோக்கம் என வகைப்படுத்துக.

3. வணிக துணை நோக்கங்களில் இரண்டை விளக்குக.

4. தேவை விருப்பம் என்பவற்றை விளக்குக.

5. தேவையின் பண்புகளை விருப்பத்தின் பண்புகளோடு ஒப்பிட்டு வேறுபடுத்துக.

6. தேவை விருப்பங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.

7. உற்பத்தி வணிகத்தை குறிப்பிட்டு அதன் வகைகளை வேறுப்படுத்துக.

8. உற்பத்தி காரணிகள் என்றால் என்ன என்பதை குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

9 .வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர் 05 பேரை குறிப்பிட்டு அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களை குறிப்பிடுக.

10.உரிமையாளர், முகாமையாளர் , ஊழியர் ஆகியோரிடம் இருந்து வணிகம் எதிர்ப்பார்க்கும் பங்ளிப்பை தனித்தனியே விளக்குக.